1975 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தஞ்சை மாவட்டம்தான் இன்றைக்கு தமிழ்நாட்டை காப்பாற்றி வருகிறது. இந்த மாவட்டத்திற்கு எல்லாவித உதவியும் செய்யப்படும்.

திரு. அ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மத்திய அரசு கூடுதலாக கொடுக்கவில்லை என்றாலும் மாநில அரசு கொஞ்சம் கூடுதலாக சேர்த்துக் கொடுத்தால் நிச்சயமாக விவசாயிகள் அரசுக்கு கொடுக்க முன் வருவார்கள். அரசாங்கம் கொஞ்சம் சேர்த்துக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் நாம் ஏற்கெனவே செய்திருக்கிறோம். ரூ. 74 மத்திய அரசாங்கம் சொல்லியிருக்கிறது. நாம் ரூ. 89 கொடுக்கிறோம். சர்ப்ளஸ் நெல்லை ரூ. 100க்-கு வாங்குகிறோம்.

திரு. கே. எ. வகாப் : உரம் இரட்டிப்பான விலையாகியிருக்கிறது என்று சொன்னார்கள். அண்மையிலே கூட ரூ. 15 கூட்டி இருக்கிறார்கள். இப்படி விலையை கூட்டிக்கொண்டே போகிறார்கள். நீங்களும் கேட்கிறீர்கள். நாங்களும் கேட்கிறோம், விவசாயிகளும் கேட்கிறார்கள். ஆகவே, பிரச்னையைத் தீர்க்க வேண்டும். ஆகவே, மத்திய அரசை சொல்லிக் கொண்டிருக்காமல், இப்பொழுது ஏறி இருக்கிற விலையையாவது தமிழக அரசே ஏற்றுக் கொள்ள முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சொல்லிக்கொண்டுதான் இருக்க வேண்டும் கேட்டுக்கொண்டுதான் இருக்கவேண்டும். மத்திய அரசாங்கம் இறங்கி வரும் வரை நாம் அப்படித்தான் செய்யவேண்டும்.

குடிநீர் வழங்கும் திட்டங்கள்

*611 வினா

திரு. வா. முத்து : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம் மல்லசமுத்திரம் பேரூராட்சிக்கு குடிதண்ணீர் வழங்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : சேலம் மாவட்டம் மல்லசமுத்திரம் பேரூராட்சியின் வெங்கடேசபுரியில் ரூபாய் இருபதாயிரம் செலவில் இரு ஆழ் துளைக் கிணறுகள் போடப்பட்டு அத்துடன் கையினால் இயக்கப்படும் குழாய்கள் பொருத்தப்பட்டு வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.

*612 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to remove the silt in the Rama nayakani tank near Hosur Town and to deepen it, for supplying drinking water to Hosur Town; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, it is a very big tank and the entire Hosur Town depends upon this tank for drinking and other purposes. Once it is filled there would be water for two or three years, but on account of the silt there, its capacity is going down every year and the people suffer. This year it is empty. So, if the local panchayat or panchayat union has no funds, may I request the Hon. Minister to ask at least the Public Works Department to undertake the work so that the people may not suffer ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, இது பெரிய டாங்காக இருந்தாலும் அதிலேயிருக்கிற தண்ணீர் 32 மில்லியன் கன அடிதான் மழை பெய்தால் சேருகிறது. அதற்கு பாசனம் 80 எக்கர் இருக்கிற காரணத்தாலே, அந்த பாசனத்திற்கான நீர் அதற்கு போத வில்லை என்ற காரணத்தினால்—முன்னே எஸ்டிமேட் போட்டிருக்கிறார்கள் அங்கேயிருந்து தண்ணீர் எடுக்க வேண்டுமென்று. பின்னர் அது பாசனத் திற்குத்தான் தகுதி என்பதால்—அதை கைவிட்டு விட்டார்கள். இப் பொழுது ரூ. 32·78 இலட்சத்துக்கு எஸ்டிமேட் போட்டு, ஒசூர் மற்றும் மத்தகிரி பேரூராட்சி மற்றும் அரசு கால்நடை பண்ணை ஆகியவைகளுக்குத் தண்ணீர் வழங்கும் திட்டம் இணைந்துள்ளது. அரசு கால்நடை பண்ணைக்கு கொடுக்க இருக்கும் 0·25 மில்லியன் லிட்டருடன் சேர்த்து சுமார் 4·24 மில்லியன் லிட்டர் தண்ணீருக்காகத் திட்டம் போட்டிருக்கிறார்கள். அதை சி.இ. பாஸ் செய்திருக்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன் அதற்கான ஒப்புதலை தருமானால் நிச்சயமாக அந்த வேலை செயல்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும்

மருங்கூர்—தோவாளை சாலை

*613 வினா.—திரு. வீ. கே. இராஜாப்பிள்ளை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

குமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம் தாலூகா, மருங்கூரிலிருந்து காமநாயக்கன்புதூர் வழியாக தோவாளைச் சானலுக்கு செல்லும் சாலை யினைச் செப்பனிடுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அகஸ்தீஸ்வரம் ஒன்றியம் இச்சாலையை மேம்படுத்த ஆவன செய்து கொண்டிருக்கிறது.